
# சுதந்திரன்
SUTANTIRAN



வள்ளுவர் ஆண்டு 2008
ஆடி 26
ஷஃபான் பிறை 24
புதன் (10-8-1977)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 21
தொலைபேசி: 23411
விலை சதம் 35

வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெற்ற தமிழ் இளைஞர் பேரவையின் தமிழ் ஈழ எழுச்சி விழாவில், மேடையில் கூட்டணி செயலதிபர்கள் மு. சிவசிதம்பரம் பா. உ, அ. அமிர்தலிங்கம் பா. உ., பருத்தித்துறை பா. உ, க. துரைரத்தினம், கூட்டணித் தலைவர் திரு. எஸ். தொண்டமான், கல்முனை வேட்பாளர் சட்டத்தரணி சம்சுதீன், ஆகியோர் அமர்ந்திருப்பதையும, எதிர்க்கட்சித் தலைவர் நாவலர் அமிர்தலிங்கம் சிறப்புரையாற்றுவதையும், கூட்டத்தில் கலந்துகொண்ட பல்லாயிரக்கணக்கான மக்களில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம், விழாவுக்கு தலைமைதாங்கிய திரு. இராச. மனோகரனும் படத்தில் காணப்படுகிறார்,

# இரத்தக்களரி ஏற்பட்டாலும் தமிழ்ஈழம் உருவாகியே தீரும்!

## சமாதானத் தீர்வு ஏற்படாவிடின் நேரடிப் போராட்டத்தில் குதிப்போம்!

### தமிழீழ எழுச்சி விழாவில் தலைவர் அமிர் ஆவேச முழக்கம்!

"நடைபெற்றுமுடிந்த பொதுத்தேர்தலில் தமிழ்ஈழ மக்கள் திட்டவட்டமான தெளிவான தீர்ப்பு ஒன்றை வழங்கியுள்ளனர். மறுக்கமுடியாத தமது சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒரு சுதந்திரத்தமிழ் ஈழ அரசை மீள அமைத்திடவேண்டுமென்பதுதான் தமிழ் மக்கள் ஜனநாயக ரீதியில் தந்துள்ள கிஞ்சிற்றும் ஈடாட்டமில்லாத தெளிவான தீர்ப்பாகும். தமிழ் மக்கள் தந்த இந்தத் தீர்ப்பை ஏற்று—மலேசியாவும், சிங்கப்பூரும் சமாதானமாகப் பிரிந்ததுபோல, தமிழ்ஈழ மக்கள் பிரிந்துசென்று தம்மைத்தாமே ஆளுவதற்கு சிங்கள அரசாங்கம் வழிவிட்டுக்கொடுக்கிறதா என்பதை முதலில் பார்ப்போம். இப்படி சமாதானமாகப் பிரிந்துசெல்வதன்மூதம் இரு தேசிய இனங்களும் இரு அயல்நாட்டு மக்களாக நட்புறவுடன் தொடர்ந்து சகோதரர்களாக வாழமுடியும். சமாதான முயற்சிகள் தோல்வியுறும் பட்சத்தில் எங்கிருந்தாவது, எவரிடமிருந்தாவது உதவிபெற்று இரத்தக்களரி ஏற்படுத்தியாவது எமது சுதந்திரத்தை நாம் வென்றெடுத்தே தீருவோம்; ஒரு சுதந்திரத்தமிழ் ஈழத்தை நிறுவியே தீருவோம்."

இவ்வாறு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் கொழும்பு மாநகரத்தின் சரித்திரமே காணாத அளவுக்கு தமிழ் மக்கள் வெள்ளம்போல் திரண்டிருந்த தமிழ்ஈழ எழுச்சி விழாவில் உரையாற்றிய தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபரும், எதிர்க்கட்சித் தலைவருமான நாவலர் அ. அமிர்தலிங்கம் முழக்கமிட்டார்.

5-8-77 வெள்ளிக்கிழமை மாலை இந்த தமிழ்ஈழ எழுச்சி விழாவை தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக் கிளையினர் நடத்தினர். கொழும்பு மாநகரில் நடைபெற்ற எந்தக் கூட்டத்துக்கும் இதுபோன்று தமிழ் மக்கள் வெள்ளம் திரண்டதில்லையென்று கூறும்வண்ணம், இராமகிருஷ்ணமண்டபத்தில் உள்ளும் புறமும் மக்கள் தலைகளால் முட்டிவழிந்தது. அறிவும் ஆற்றலும், பல்துறை அனுபவமும் மிக்க பெரியார்கள் பலர் இந்தக் கூட்டத்தில் பார்வையாளர்களாக கலந்துகொண்டிருக்கக் காணப்பட்டனர்.

எழுச்சி விழாவுக்கு தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த திரு. இராஜ மனோகரன் தலைமை தாங்கினார். இவ்விழாவில் திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசியதாவது:—

"நடைபெற்று முடிந்த தேர்தலில் சிங்கள நாட்டில் சிங்கள மக்கள் முன்பு ஆட்சியிலிருந்த சிங்களக் கட்சியை அடியோடு அகற்றிவிட்டு, புதிய சிங்களக்கட்சியை அரசபீடத்தில் அமர்த்தியுள்ளனர். அவர்கள் தாம் விரும்பியபடி ஆட்சியை மாற்றுகிறார்கள் — புதிய ஆட்சியை ஏற்றுகிறார்கள். ஆனால் தமிழ் மக்களோ எந்தச் சிங்கள ஆட்சி வந்தாலும், அதிகாரமற்ற அடிமை இனமாக, ஆளப்படும் இனமாகவே வாழ வேண்டிய நிலையிலுள்ளனர்.

"யூ. என். பீ. ஆட்சி பதவிக்கு வந்ததும், ஒரு சில தமிழர்களது மனங்களில்— குறிப்பாக கொழும்பிலுள்ள சில பணக்காரத் தமிழர்களது மனங்களில் — தமிழர் பிரச்சினைகள் யாவும் தீர்ந்துவிட்டதுபோல ஒரு பிரமை ஏற்பட்டிருக்கிறது. இந்த மயக்கத்திருந்து தமிழினம் விடுபடவேண்டும். நானோ, தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஏனைய தேசிய பேரவை உறுப்பினர்களோ எந்தவித

— 2-ம் பக்கம் பார்க்க

### காந்தி அடிகள் கூறியது போல்...!

'மிகப்பெரும்பான்மை பலம்பெற்று பதவிக்கு வந்திருக்கும் புதிய சிங்கள அரசாங்கம் எங்கள் தமிழ்ஈழ விடுதலைப் போராட்டத்தை முளையிலேயே நசுக்க முற்படலாம்; கடுமையான சட்டங்களைப் போடலாம்; ஆனால் நாம் எதற்கும் தயாராக இருக்கிறோம். இந்திய சுதந்திரப் போராட்டத்தின்போது மகாத்மாகாந்தி உப்பு அள்ளி சட்ட மறுப்பு நடத்தினார். அப்போது தமது கையுள் இருக்கும் அந்த ஒரு பிடி உப்புக்குள் இந்திய சுதந்திரம் அடங்கியிருப்பதாகக் கூறினார் காந்தியடிகள். உப்பு அள்ளிய எங்கள் கையை நீங்கள் வேண்டுமானால் அடித்து முறிக்கலாம்; எங்களை சுட்டுத் தள்ளலாம்; ஆனால் கையில் இருக்கும் உப்பை கீழே போட்டுவிடமாட்டோம்' என்றார் மகாத்மாகாந்தி. அதேபோலத்தான் நாம் கூறுகிறோம் — எந்த அடக்குமுறையாலும் எமது தனிநாடு இலட்சியத்தை எம்மிடமிருந்து பிரித்துவிட முடியாது!

—5-8-77 இராமகிருஷ்ண மண்டப எழுச்சி விழாவில் நல்லூர் சிவா பேசியது.

தமிழ் ஈழத் தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் எமது பங்கு என்ன?

இப்பரந்த நாடு வெள்ளையனின் ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்றபின் தமிழன் தமிழனாக இதுகால வரை வாழ்ந்ததில்லை. அவனுக்குள்ள உரிமைகள் முறையாக கொடுக்கப்படவில்லை. ஏன்? அவனது சிறுபான்மையானதாம். இது பௌத்த சிங்கள நாடாம். இவையே சிங்கள ஆட்சியாளர்கள் கூறும் சித்தாந்தம். சோஷலிசம் என்னும் போர்வையில் ஏகாதிபத்திய ஆட்சி நடத்துகிறது சிங்கள பௌத்த மக்கள் அரசு அஸ்ஸாமிலிருந்தும் சீனாவிலிருந்தும் கொண்டு வரப்பட்டதேயிலைச்செடியின் பரம்பரை இப்போது 'சிலோன் டீ' ஆனால் அதை வளர்க்க வந்தவனின் சந்ததியினர் இன்னும் 'இந்தியர்கள்' இதுவும் தமிழனின் ஒரு பக்கநிலை இந்நிலைகள் மாறி தமிழன் தமிழனாக மதிக்கப்படவேண்டும். அவனது எல்லா உரிமைகளும் கிடைக்கப்பெறவேண்டும். இதற்காக நாம் செய்ய வேண்டியது என்ன?

தமிழன் ஒன்று சேரவேண்டும். தமிழ் சமுதாயம் ஒன்று சேரவேண்டும் என்று நேரு "சமத்துவமும், எல்லோருக்கும் சமவாய்ப்பும் தரக்கூடியசோஸலிச சமுதாயத்தை உருவாக்குவதுதான் நமது இலட்சியம் நாம் பல்வேறு சாதிகளாய் பிரிந்து இருந்தால் இதை அடையமுடியாது. ஏனெனில் சாதிசோஸலிஸத்துக்கு மாத்திரம் விரோதமானதல்ல. சமத்துவமனப்பான்மைக்கும் ஒன்றாக வாழும் மனப்பக்குவத்துக்கும் விரோதமானது'' என்றார்.

அதே போல் தமிழ்பேசும் மக்கள் அனைவரும் தமிழர்கள். தமிழ் தாய் பெற்ற புத்திரர்கள் அனைவரும் தமிழர்கள். அவன் இந்துவாக கிறிஸ்தவனாக, முஸ்லிமாக எதுவாகவுமிருக்கலாம், ஆனால் அவன் முதல் முதலில் வாய் திறந்துபேசிய அன்பு வார்த்தை 'அம்மா' என்னும் அமுததமிழ். அமுதத் தமிழ்பேசிய அவன் தமிழன். தமிழனே! அமரர்—நேரு கூறியது போல் நாம் இனியும் பிரிந்திருக்கக் கூடாது. எமக்கு சமத்துவமும், சமவாய்ப்பும் வேண்டுமானால், உலகமக்கள் முன் தலை நிமிர்ந்து "நான் ஒரு தமிழன்'' என்று மார்தட்டி பெருமைப்படவேண்டுமானால் எமக்கென்றோர். தாயகம் தேவை. ஆகையால் தான் எமக்கு 'தமிழ் ஈழம்' தேவை என்று கோருகிறோம்.

''தியாகம் செய்யச் சித்தமாயிரு; உலக நன்மைக்காக உன் சுகத்தையும் துறந்துவிடு'' என்று முழங்கினார் கார்ல் மாக்ஸ். ஆம்! அவர்சொன்னதுபோல் இன்றைய இளைய தலைமுறை, இளைஞர் சமுதாயம் தியாகச்செம்மல்களாக வெஞ்சிறைகளிலே வாடி வதங்கி 'தமிழ் ஈழத்துக்காக போராடுகிறது. தமிழனே! நாளை நமதே என்ற நம்பிக்கையோடு களத்துக்கு இறங்கு என்று இளைய தலைமுறையான நாங்கள் கோஷமிடுகிறோம்.

'மக்களுக்கு வெளிச்சத்தை மட்டும் காட்டுங்கள்; அவர்களின் வழியை அவர்களே கண்டு பிடித்துக்கொள்வார்கள்'' என்று கார்ஸ் மாக்ஸ் அன்று கூறியது இன்று எமக்கு எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது. எமக்கு எம் தலைவர்களால் வெளிச்சம் காட்டப்பட்டுவிட்டது. இப்போது நாம் எதையும் தாங்கும் இதயங்களை இரும்பாக்கிக் கொண்டு அறவழி செல்ல நம்மை நாமே தயார் படுத்திக்கொள்ளவேண்டும்.

''முயற்சியில்லாத நம்பிக்கை கப்பலில்லாத யாத்திரைபோன்றது என்றுவேல்ஸ் பழமொழி எமக்கு எடுத்துரைப்பதென்ன? நமக்கு நம்பிக்கை மட்டுமிருந்து போதாது. முயற்சியும்வேண்டும். எமது தலைவர்கள் எமக்கு தமிழ் ஈழத்தைபெற்றுத் தரட்டும்; அதன் பின் சுகபோகம் அனுபவிப்போம் என்ற கொள்கை என்றுமே எமது இதயங்களில் இடம்பெறக் கூடாது. நாமே நமது தாயகத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். எமது தாய்க்காக தாய்மொழிக்காக, தமிழுக்காக, தமிழ் ஈழத்துக்காக இரத்தம் சிந்தவும் தயாராக இருக்கவேண்டும்.

இங்கே வேர்போட்டுக் கிடக்கிற சீர்கெட்ட சமு

**புத்தளம்**
**தமிழ் செல்வம்**

தாய அமைப்பை மாற்றி புதியதோர் உலகு செய்யத் துடிக்கும் நாம்,நமது பழைய வெண்டைக்காய் போக்குகளை கைவிட்டு, திட்டவட்டமான செயல் முறைகளைப் பின் பற்றவேண்டும். அறுவைசிகிச்சைக்கு புறப்பட்டவர்கள் குருதித் துளியைக் கண்டு கைகால் பதறக் கூடாது.

வியட்நாம் முதல்வர் பாம் வான் டோங் "மலை முதல் கடல் வரை—பட்டணம் முதல் பட்டிதொட்டிகள் வரை — நாட்டிலே உள்ள ஒவ்வொருவனும் போர்வீரனாக விளங்கவேண்டும்; பழமையை உடைத்தெறிந்து புதிய பொதுமை நலச்சமுதாயத்தை உருவாக்கும் படை வீரனாக விளங்கவேண்டும்'' என்று கூறியது போல் தமிழ்தாய் பெற்ற ஒவ்வொரு தமிழனும் ஒவ்வோர் போர் வீரனாக திகழவேண்டும். தமிழுக்காக, தமிழ் தாயகத்துக்காக தமிழ் மண்ணுக்காக உயிரை துச்சமென மதித்து வீர நெஞ்சம் காட்டி தோளோடு தோள் நின்று போராடும் இளவரசர்களாக தமிழன் திகழவேண்டும்.

பகுத்தறிவு மேதை டாக்டர் அம்பேத்கார் கூறியது போல் ''பறிபோன உரிமைகளை பிச்சையாக பெறமுடியாது. தீர்மானங்கள் மூலமோ, மன்றாடுவதன் மூலமோ நியாயம் பிறக்காது. ஆடுகளைத்தான் கோயிலில்வெட்டுவார்களே ஒழிய சிங்கங்களையல்ல. ஆடுகளாயிராதீர்கள். சிங்கங்கள் போன்று வீறுகொண்டு எழுங்கள்'' என்று தமிழின உரிமைக்காக போராடும் ஒவ்வோர் தமிழனையும் வேண்டுகிறோம்.

வாழ்க தமிழ்!

வளர்க தமிழ் மொழி!

வெல்க தமிழ் ஈழம்!

# இரத்தக்களரி ஏற்பட்டாலும் தமிழ் ஈழம் உரு...

—1ம் பக்கத் தொடர்

மயக்கத்திலும் ஆட்படாது மிகவும் தெளிவாக இருக்கிறோம். தனித் தமிழ்ஈழம் நிறுவுவதொன்றே எமது இலட்சியம் என்பதை எப்போதும் கருத்தில் கொண்டு செயலாற்றுகிறோம்.

"இன்றைய யூ. என். பி. அமைச்சர்களை வைத்துக் கொண்டே — அவர்கள் முன்பு எதிர்க்கட்சியிலிருந்த போது—நாம் பகிரங்கமாக கூறியிருக்கிறோம்; சிறிலங்கா சுதந்திரக்கட்சி சீறிவரும் நாகபாம்பு என்றால், யூ. என். பி. பச்சைப் புல்லுக்குள் கிடக்கும் புடையன் பாம்பு என்பதை நாம் கூறியிருக்கிறோம். சீறிவரும் நாகத்தை விட இந்த யூ.என்.பி. புடையனிடம் நாம் அதிக எச்சரிக்கையுடனிருக்கிறோம். தமிழ் மக்களும் எவ்வித மயக்கத்துக்கும் ஆளாகாது தங்கள் இலட்சியத்தில் கண்ணும் கருத்துமாக இருந்திட வேண்டும்.

"நடைபெற்ற தேர்தலில் தமிழ் ஈழத்தைச்சேர்ந்த 57 சத வீதமான மக்கள் மிகவும் தெளிவாகவும் திட்டவட்டமாகவும்,தமிழர் விடுதலைக் கூட்டணிக்குவாக்களித்ததன் மூலம் தமிழ்ஈழ இலட்சியத்தை ஏற்றுக் கொண்டதுடன், தமிழ்ஈழம் நிறுவுவதற்கான அதிகாரத்தையும் எமக்குத் தந்துள்ளனர். இன்று சிறிலங்காவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள யூ. என். பி. பெற்றுள்ள வாக்குகள் 51 சத வீதமானதுதான்; ஆனால் எமக்கோ 57 சதவீதமான தமிழ்ஈழ மக்கள் வாக்களித்து தமிழ்ஈழ இலட்சியத்தை ஏற்றுள்ளனர்;

தமிழ்ஈழ மக்களின் அனுமதியை இவ்வளவு தெளிவாகப் பெற்றுள்ள நாம் சுதந்திரத் தமிழ் ஈழம் அமைத்திட, எமது உடல் பொருள், ஆவி, அனைத்தையும் அர்ப்பணித்து உழைப்போம்;

"நடைபெற்ற பொதுத் தேர்தலை ஒரு சர்வஜன வாக்கெடுப்பாக நடத்தியதில் தமிழர் விடுதலைக் கூட்டணி வெற்றி பெற்றுவிட்டது; நோக்கம் நிறைவேறிவிட்டது; தமிழ் ஈழத்துக்கு போராடும்படி கட்டளை கிடைத்துவிட்டது. எனவே மீண்டும் அடுத்த பொதுத்தேர்தலை சர்வஜன வாக்கெடுப்பாக நாம் பிரகடனப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை; சர்வஜன வாக்கெடுப்பு ஒரு முறை தான் நடத்தமுடியும். அதை நடத்தி வெற்றியீட்டி விட்டோம்; மக்கள் அனுமதி கிடைத்துவிட்டதால் இனி தமிழ்ஈழம் நிறுவும் பணியில் தீவிரமாக ஈடுபடுவோம்.

இன்று தரப்படுத்தலை நீக்கிவிட்டால், புதிய அரசியலமைப்பு வந்து விட்டால் அல்லது தமிழ்மொழிக்கு அரசியல் சட்டத்தில் சில உரிமைகளை எழுதிவிட்டால், தமிழர் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று சிலர் கருதுகிறார்கள்; இவற்றால் பிரச்சினை தீர்ந்துவிடாது; ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது; கடதாசியில் சீனியென்று எழுதி விட்டு, அதை நக்கினால் இனிக்காது தமிழினம் இன்று ஆளப்படும் இனமாக இருக்கிறது; இந்த நிலை மாற்றியமைக்கப்பட்டு, தமிழன் தன்னைத்தானே ஆளவேண்டும்; தனது தமிழ் ஈழ நாட்டு நிர்வாகத்தை தானே நடத்தவேண்டும்; அதிகாரம் என்ற அகப்பை தமிழனது கைகளுக்கு வரவேண்டும்; இதுவே நமது இலட்சியமே தவிர — அற்பமொழிச் சலுகைகள் அல்ல; அற்பமொழிச் சலுகைகளால் தமிழினம் ஏமாந்துவிடாது.

யூ. என். பி. அரசாங்கத்தின் புதிய கொள்கைப் பிரகடனத்தில், தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை என்பதை பகிரங்கமாக ஒப்புக்கொண்டிருக்கிறார்களே தவிர வேறு உருப்படியாக எதுவும் இல்லை; உத்தேச வட்டமேசை மாநாடு, எந்த அடிப்படையில் கூட்டப்படும் என்பது பற்றியும் கூறப்படவில்லை. எனவே எந்தவித மயக்கத்திலும் தமிழினம் மயங்காது தனது சுதந்திரத்துக்காக போராடியே தீரும்!

"வடக்கு, கிழக்கு மாகாணங்கள் என்று ஒரு பகுதி இனிக்கிடையாது; தமிழ் ஈழம் மட்டுமே உண்டு; தமிழ் ஈழத்தில் சுதந்திர அரசு உருவாகினால் மட்டுமே தமிழ் ஈழத்துக்கு வெளியே வாழ்கின்ற தமிழர்களும் அச்சமின்றி தலை நிமிர்ந்து வாழமுடியும். இந்தியாவிலுள்ள முஸ்லிம்களுக்கு அருகிலுள்ள பாகிஸ்தான் எப்படி பாதுகாப்போ—அதேபோல, தமிழ் ஈழத்துக்கு வெளியேயுள்ள மக்களுக்கு தமிழ்ஈழ அரசு பாதுகாப்பாக இருக்கும்.

"சமாதான முயற்சிகளின் மூலம் எமது இலட்சியத்தையடைய முதலில் முயற்சிப்போம்; அது முடியாத விடத்து, — இதைச் சொல்வதால் நான் நாளைகூட கைதுசெய்யப்படலாம்—எந்தெந்த நாடுகளிடமிருந்து உதவிகளைப் பெறமுடியுமோ அந்தந்த நாடுகளிடமிருந்தெல்லாம் உதவி பெற்று, இரத்தக்களரியேற்படினும், எமது சுதந்திரத்தை, நிலை நாட்டியே தீருவோம். இது உறுதி நமது இளைஞர்கள் பங்களாதேஷ் 'முக்தி பாஹினி' படை போல இயங்கவேண்டும்.

தேசியப்பேரவையில் நாம் ஏற்றிருக்கின்ற எதிர்க்கட்சித் தலைமைப் பதவியை தமிழ்ஈழவிடுதலைப்போராட்டத்துக்கு பயன்படுத்து வோம்! சிறீலங்காவின் தேசிய அரசுப்பேரவை ஓர் போர்க்களமாகமாறும்; தமிழ் ஈழம் ஒரு புறமும் சிங்கள சிறீலங்கா மறுபுறமுமாக அங்கு மோதுகின்ற நிலையை நீங்கள் வருங்காலத்தில் காண்பீர்கள்!''

தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் திரு. எஸ். தொண்டமான் பா. உ. பேசுகையில் கூறியதாவது:-

''தமிழ்பேசும் மக்கள், இன்று கிழக்கு, வடக்கு, மலைநாடு என்ற பேதமின்றி ஒன்றுபட்டுவிட்டார்கள்; வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின்படி, வடக்கு கிழக்கு மாகாணங்கள்—அதாவது தமிழ் ஈழம்— ஒரு தனி நாடாகவேண்டும்; கண்டித் தீர்மானத்தின்படி மலையகத்தில் வாழும் தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் பூரண சம உரிமை, நிலவுரிமை, மொழியுரிமை பெற்று சம அந்தஸ்துடன் வாழவேண்டும். இந்த இரு இலட்சியங்களும் வெற்றி பெற்றால் மாத்திரமே இந்நாட்டில் வாழும் தமிழர்கள் சுதந்திரமாக வாழமுடியும்!

பட்டிருப்பு பா.உ. திரு. பூ. கணேசலிங்கம் பேசுகையில்—மட்டக்களப்பு, மன்னார், யாழ்ப்பாணம் என்ற பிரதேசபேதமின்றி ஈழத்தமிழினம் ஒன்றுபட்டு விட்டதென்றும், தனித்தமிழ் தொகுதியான பட்டிருப்புத் தொகுதியிலிருந்து சிங்களக் கட்சிகள் அனைத்தும் வேரோடு கெல்லியெறியப் பட்டுவிட்டதென்றும், தமிழ்ஈழ இலட்சியத்துக்கு போராடவே தாம் பா.உ. பதவியில் இருப்பதாகவும், அந்தப் பதவியிலிருப்பதன் மூலம், இலட்சியத்துக்கு போராட முடியாத நிலை ஏற்படுமாயின், தாம் உடனடியாக பதவியிலிருந்து விலகிவிடப் போவதாகவும் தெரிவித்தார்.

திருகோணமலை பா. உ. திரு. இரா, சம்பந்தன் பேசுகையில்—திருகோணமலையை எந்தவிதத்திலும் சிங்கள ஆக்கிரமிப்பிலிருந்து காப்பாற்றியே தீருவது என்று திருகோணமலைத் தமிழ் மக்கள் உறுதியுடன் இருந்து வருவதாகவும், திருகோணமலைக்கு பிறமாவட்டங்களிலிருந்து தமிழ் மக்கள் வந்து குடியேற வேண்டுமென்றும், இப்படி குடியேறுபவர்களுக்கு முடிந்த உதவிகள் அனைத்தையும் செய்ய தாம் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

வவுனியா பா. உ. திரு. தா. சிவசிதம்பரம் பேசுகையில் — வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை, ஆகிய நான்கு எல்லைப்புற பிரதேசங்களும் பாதுகாக்கப்படவேண்டுமென்றும், இப் பிரதேசங்களில் குடியேறுவதற்கு தமிழ் ஈழத்தின் ஏனைய பகுதிகளிலிருந்து தமிழ் மக்கள் முன்வர வேண்டுமென்றும், சாத்வீக வழிகளிலோ, அசாத்வீக வழிகளிலோ போராடி, தமிழ் ஈழத்தை நாம் நிச்சயமாக மீட்டெடுத்தே தீருவோம் என்றும் குறிப்பிட்டார்.

பருத்தித்துறை பா. உ. துரைரத்தினம் பேசுகையில் —நாம் சுதந்திரமாக வாழ்ந்த மக்கள்— எனவே மீண்டும் சுதந்திரமாக வாழ விரும்புகிறோம்; இதை யாரும் தடுக்கமுடியாது. வெளியிடங்களில் வாழும் தமிழ் மக்கள், பின்னர் எம்மைக் குறை கூறாது இப்போதே தமது முதலீடுகளை தமிழ் ஈழத்துக்கு கொண்டு வந்து விடுவது நல்லது என்றார்.

யாழ் பா. உ. திரு. வெ. யோகேஸ்வரன் பேசுகையில் —தமிழ் மக்கள் தந்த கட்டளை ஏற்று, தமிழ் ஈழத்தை

—4-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “தூக்குமேடையில் தொங்க நேரிடினும் ஈழ விடுதலையைப் பெற்றேதீருவோம்”

## 'விஜிதா யாப்பா' வுக்கு கூட்டணித் தலைவர்கள் அளித்த பேட்டி!

தேசிய அரசுப்பேரவையின் எதிர்க்கட்சித் தலைவரின் இருக்கையில் தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் இன்று அமரும்போது, அவரது சிந்தனைகள் நிச்சயமாக 1915ம் ஆண்டுக்குப் பறந்து செல்லும்!

சிங்கள— முஸ்லிம் இனக் கலவரத்தின் உச்சக்கட்ட வேளையில் சகல சிங்களத் தலைவர்களும் சிறையிடப்பட்டு இருந்த வேளையில், சிங்கள மக்களுக்காகவும் பேசவேண்டிய ஒரு சுமை சேர். பொன் இராமநாதனின் தோள்களில் அன்று விழுந்திருந்தது.

இரண்டு மில்லியன் மக்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடதுசாரி ஐக்கிய முன்னணிக்கும், மற்றும் இடதுசாரிக்கட்சிகளுக்கும் வாக்களித்திருந்தாலும் இந்த மக்களின் உரிமைகளுக்காக வாதாடவேண்டிய பொறுப்பு இப்போது தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவரின் தோள்களிலே சுமத்தப்பட்டுள்ளது தமிழர் கூட்டணிக்கு அரசியலில் இது ஓர் புதிய பாத்திரமாகும்.

“சிங்கள ஏகாதிபத்திய அரசாங்கமும், அதற்கு எதிராக ஒரு தமிழ் எதிர்க்கட்சியும் அமைந்திருப்பது ஒரு புதிய சூழ்நிலையாகும்; இந்த சூழ்நிலை எமது நிலையைத் தெளிவாக்கிக் காட்டுகிறது. இது எதிர்பாராது ஏற்பட்ட ஓர் நிலைமையாகும். உலகின் கவனத்தை எமதுபிரச்சினைகள்மீதுதிருப்புவதற்கு இந்த வாய்ப்பை நாம் நிச்சயம் பயன்படுத்துவோம்” என்று கூட்டணித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் என்னிடம் தெரிவித்தார்.

தமிழர் கூட்டணியின் பொருளாளர் திரு. சி. கதிரவேற்பிள்ளை அவர்களோ, ஒரு தனித் தமிழ் நாட்டை நிறுவுவதற்கு சிங்களமக்களின் நல்லெண்ணத்தைச் சம்பாதித்துக் கொள்வதற்கு இது ஒரு பொன்னான வாய்ப்பு என்று கருதுகிறார்.

### அரசியலமைப்பை உடைப்போம்!

“இப்போதைய அரசியலமைப்பை சுக்கு நூறாக உடைத்தெறிய நாம் உறுதி பூண்டுள்ளோம்” என்று திரு. அமிர்தலிங்கம் என்னிடம் தெரிவித்தார்.

ஒரு தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கு பிரதமர் ஜே. ஆர். உங்களை அழைத்தால் என்ன செய்வீர்கள் என்று நான் கேட்டபோது, கூட்டணித்தலைவர்கள் அனைவரும் ஒரே குரலில் “எமக்கு அதுபற்றி அக்கறையில்லை” என்று தெரிவித்தனர்.” அதேசமயம் யூ. என். பி: அரசாங்கம் கொண்டுவரக் கூடிய முற்போக்கான திட்டங்களை எதிர்க்கட்சியிலிருந்தாலும் நாம் ஆதரிப்போம்” என்று திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களில் பெரும்பான்மையோர் தனிநாடு இலட்சியத்தை ஏற்றுக் கொள்ளுகிறார்களா இல்லையா என்பதை அறிவதற்காக நடைபெற்ற பொதுத்தேர்தலை ஒரு சர்வஜன வாக்கெடுப்பாக தாம் பயன்படுத்தியதாகவும் கிழக்கு மாகாணத்தில் ஒரு தமிழ் தொகுதியையும் முஸ்லிம் தொகுதிகளையும் தவிர அனைத்துத் தொகுதிகளிலும் தாம் பெருவெற்றியீட்டியுள்ளதாகவும் கூட்டணி தலைவர்கள் தெரிவிக்கின்றனர்.

சிறிலங்காவின் தேசிய அரசுப் பேரவையில் இருந்து கொண்டே, அதே சமயம் தமிழ் ஈழத்தின் அரசியல் நிர்ணயசபையைத் தாம் விரைவில் கூட்டவிருப்பதாக கூட்டணி தலைவர்கள் தெரிவித்தனர். அத்துடன், தமிழ் ஈழம் சுதந்திர நாடாக செயற்படும்போது, திருகோணமலைதான் அதன் தலைநகரமாக விளங்கும் என்றும் கூட்டணித் தலைவர்கள் தெரிவித்தனர்.

சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கும் விதிகளை யூ. என். பி. அரசாங்கம் புதிய அரசியல் திட்டத்தில் சேர்த்தால் உங்கள் நிலையென்ன என்று கேட்ட போது திரு. கதிரவேற்பிள்ளை அவர்கள் பின்வருமாறு கூறினார்:—

‘‘கடதாசித்தாளில் எழுதப்படும் உத்தரவாதங்களை நாம் நம்பத்தயாராக இல்லை; அது எப்போதும் கடதாசியில் மட்டுமே இருக்கக்கூடியவை!’’

“தமிழ் ஈழத்துக்கான சுதந்திரப்போராட்டம் நிசசயம் பாராளுமன்றத்துக்கு வெளியே தான் நடைபெற வேண்டும். வரிகெடா இயக்கம் போன்ற சட்ட மறுப்பு ஒத்துழையாமை இயக்கங்களாக அது இருக்கலாம். பங்களாதேஷ் மக்கள் சுதந்திரத்துக்குமுன் நடத்திய போராட்டம் போன்று இது முழுக்க முழுக்க ஒத்துழையாமை இயக்கமாக அமையும்.” என்று செயலதிபர் திரு. மு. சிவசிதம்பரம் தெரிவித்தார்.

“நாங்கள் ஒரு தனித் தேசிய இனம் என்பதில் எள்ளளவும் பிரச்சினையிருக்க முடியாது. நாங்கள் தனித் தேசிய இனம், எங்களுக்கென்றொரு தேசியமொழி கலாசாரம், பாரம்பரியம் உண்டு. இதன்படி, நாம் ஒரு தனி நாட்டினம்” என்றார் திரு. சி. கதிரவேற்பிள்ளை.

தமிழர்கள் தனிநாடு கோரிப் போராடுவதுவெளி நாட்டுத்தலையீட்டுக்கு இடங்கொடுக்காதா என்றுகேட்ட போது திரு. அமிர்தலிங்கம் பின்வருமாறு கூறினார்:—

“காமன்வெல்த் நாடுகளுக்கும் சோசலிச நாடுகளுக்கும் எமது நிலையை நாம் எடுத்து விளக்கியிருக்கிறோம்; ஏதாவது தமக்கு ஆதாயம் கிடைக்கும்என்று நம்பிக்கையிருந்தாலொழிய எந்த ஒரு வெளிநாடும் நமது பிரச்சினையில் தலையிடப்போவதில்லை. திருகோணமலையைக் கட்டியாளுபவர்கள் இந்து மகா சமுத்திரத்தையே கட்டியாளுவார்கள் என்ற நெப்போலியன் கூற்று இன்றும் உண்மையானதுதான்.”

எந்த விதத்தில் வெளிநாடுகளுடன் உடன்பாட்டுக்கு வருவீர்கள் என்று திரு. அமிர்தலிங்கத்திடம் கேட்ட போது, நாங்கள் பகிரங்கமாக எதையும் ஏலம்விடத்தயாராக இல்லை; அந்தரங்கமாகவே உடன்பாடுகள் செய்துகொள்ள விரும்புகிறோம்” என்றார் அவர்.

இந்தியத் துணைக்கண்டத்தைப் பொறுத்தவரையில்— இந்திய மத்திய அரசு கூட்டணியின் தனிநாடு இலட்சியத்துக்கு சார்பாக இல்லாதபோதிலும், தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகமும், அண்ணா திமுகவும் கூட்டணிக்கு அனுதாபமாக உள்ளன.

“அரசாங்கத்தை எதிர்த்து நாங்கள் எங்கள் விடுதலைக்காகப் போராடும்போது— அவர்கள் எங்களைக் கைது செய்யலாம்; சிறைக்குள் தள்ளலாம்; எம்மை தேசத்துரோகிகள் என்று பிரகடனப்படுத்தி தூக்கில்தொங்க விடலாம்; ஆனால் எங்கள் போராட்டம் நடந்தே தீரும்” என்றார் திரு. அமிர்தலிங்கம்.

தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் இதற்கு இராணுவம் இருக்கிறதா?

“சுதந்திரத்துக்குப் போராடிய எந்த ஒரு நாடும் முதலில் இராணுவத்தை வைத்துகொண்டு போராடத்தொடங்கியதில்லை; எமது போராட்டம் நடைபெறுகிறபோது அது தானாக உருவமெடுக்கும்” என்றார் கதிரவேற்பிள்ளை.

(‘சன்’ — 4 - 8 - 77)

## மல்லிகைத்தீவில் யூ. என். பி.யின் அட்டகாசம்

நடந்துமுடிந்த தேர்தலுக்குப்பின் யூ. என். பி.யினர் கூட்டணி ஆதரவாளர்களை இப்பகுதியில் திட்டமிட்டு அடித்துத் துன்புறுத்துகின்றார்கள். இதன் விளைவாக தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த ஏழு தொண்டர்கள் மிருகத்தனமாக தாக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்கள்.

பொலிசார்முதல் அதிகாரிகள்வரை ஆளுங்கட்சி அன்பர்களுக்கு அனுசரணையாக நீதி வழங்கப்படுகின்றது. கூட்டணியைச் சேர்ந்த நண்பர்களுக்கு எந்தவிதமான நீதி விசாரணையும் இதுவரையும் கிடைக்கவில்லை. இது சம்பந்தமாக வீரமுனை, வீரச்சோலை, கணபதிபுரம், புதுநகரம், மல்வத்தை, மல்லிகை தீவு, வளத்தாப்பிட்டி போன்ற சம்மாந்துறைத் தொகுதியைச் சேர்ந்த ஏழு கிராமங்களிலுள்ள கூட்டணி ஆதரவாளர்கள் மத்தியில் பதட்ட நிலை உருவாகியுள்ளது. இதுபற்றி கூட்டணி தலைமைப்பீடத்திற்கும் அறிவிக்கப்பட்டது.

இந்த நிலை மீண்டும் ஏற்படாதிருக்க அப்பாவிகளான கூட்டணி ஆதரவாளர்களை பாதுகாக்க எம்மரும் பேரணியாம் — விடுதலைக் கூட்டணியும் அதன் தலைவர்களும் இது விடயமாக உடனடி நடவடிக்கையெடுக்க வேண்டுமென மேற்கூறிய கிராமத்து மக்களின் சார்பாக மிகமிக பணிவன்போடு வேண்டுகின்றோம்.

—த. வி கூ. கிளை
மல்லிகைத்தீவு

## தமிழ் மகளிர் பிரார்த்தனை

தமிழ் மகளிர் பேரவையின் கொழும்புக் கிளையினர் நடாத்தும் வாராந்தப் பிரார்த்தனை 12-8-77 வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு கொட்டாஞ்சேனை அர்ச் லூசியாஸ் தேவாலயத்தில் நடைபெறும்.

## மாரீசன் கூடலில் ஒரு சின்னத்தனம்

மாரீசன்கூடல் றோமன் கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி வழமை போல் பாடசாலை முன்னுள்ள கத்தோலிக்க ஆலய வளவில் 16-7-77ல் நடைபெறவிருந்தது. ஆயினும் இரு தினங்களின் முன்னிரவு பெற்றோரும் ஆலய உரிமையாளருமாகிய ஒரு சிலர் பாடசாலை அதிபரிடம் சென்று ஆலய வளவில் விளையாட்டுப் போட்டி நடத்தப்படக்கூடாது என எச்சரிக்கை விடுத்தனர்.

இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்ட அதிபர் அயலில் உள்ள தமது உடன் ஆசிரியர்களை அழைத்து ஆலோசனை நடத்தினர் அடுதத்தநாட் காலை ஆசிரியர்களும் மாணவர்களும் முற்போக்கு எண்ணங்கொண்ட படித்த ஒரு சில இளைஞரும் யுவதிகளும் சேர்ந்து காடாய்க்கிடந்த தனியார் காணியை விளையாட்டு மைதானமாக்கினர். திட்டமிட்டபடி விளையாட்டுப் போட்டி மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

அதிபரும் ஆசிரியர்களும் ஓய்வுறக்கமின்றி பாடசாலை வளர்ச்சிக்கு எவ்வளவுதான் உழைத்தபோதிலும் பெற்றோரில் ஒரு பகுதியினர் மனிதாபிமானமற்ற வகையில் நடந்துகொள்வதால் மன முறிவுற்ற அதிபரும் ஆசிரியர்களும் ஒன்று சேர்ந்து இடமாற்றம் கோரி வடமாநில கல்வி அதிபதிக்கு மகஜர் ஒன்று சமர்ப்பித்துள்ளனர்.

சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த பிள்ளைகள் அதிக அளவில் புறமுயற்சிகளில் ஈடுபடுவதே காரணமாகும் என அறியக்கிடக்கிறது.

ஆலய வளவு மறுக்கப்பட்டது சம்பந்தமாக வீறுகொண்டெழுந்து சில இளைஞர்கள் யாழ் ஆயரிடம் சென்று முறையிட்டபோது அவரும் இவ்வளவில் விளையாட்டுப்போட்டி நடத்துவதற்கு பாடசாலை நிர்வாகத்தினருக்கு எவ்வித உரிமையுமில்லையென்று கூறி தமது பொறுப்பை தட்டிக்கழித்துவிட்டாரென்று கூறப்படுகிறது. இவ்விஷயங்களை கூட்டணி செயலதிபரும் எதிர்க்கட்சித் தலைவரும் காங்கேசன்துறை பா.உ.வுமான திரு. அ. அமிர்தலிங்கம், உடுப்பிட்டி பா.உ. திரு. த. இராசலிங்கம், கோப்பாய் பா. உ. திரு. சி. கதிரவேற்பிள்ளை, பருத்தித்துறை பா.உ. திரு. க. துரைரத்தினம், வட்டாரக் கல்வி அதிகாரி ஆகியோரின் கவனத்துக்கு மேற்படி பாடசாலை அதிபரும், ஆசிரியர்களும்கொண்டுவந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது

## ரூபா. 5000 கையளிப்பு!

வெள்ளவத்தை ராமகிருஷ்ண மண்டபத்தில் நடந்த தமிழ்ஈழ எழுச்சி விழாவில்தந்தைசெல்வா நினைவாலயத்துக்கு பொதுமக்களிடமிருந்து திரட்டிய நிதி ரூபா 5000த்தையும் தமிழ் இளைஞர் பேரவை கொழும்புக் கிளையின் சார்பில் செல்வா அறங்காவல்குழுவைச்சேர்ந்த திரு. க. சச்சிதானந்தம் அவர்களிடம் மண்டூர் மகேந்திரன் விழா மேடையில் வைத்து கையளித்தார்.

## தமிழ் இளைஞர்களின் 10 கோரிக்கைகளை நாவலர் ஏற்றார்!

தமிழ் இளைஞர் பேரவையின் சார்பில் பத்துக்கோரிக்கைகளை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பீடத்துக்கு தமிழ் இளைஞர் பேரவைப் பிரமுகர் திரு. ஆ. ரகுபதிபாலசிறீதரன் அவர்கள் 5-8-77ல் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்ஈழ எழுச்சி விழாவில் பகிரங்கமாகச் சமர்ப்பித்தார். இக்கோரிக்கைகளை தாம் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வதாக தமது பேச்சின் மத்தியில் திரு. அமிர்தலிங்கம் அங்கு கூறிய போது பெருத்த ஆரவாரமும், கையொலியும் எழுந்தது.

## புனையில் சிங்களக் குடியேற்றம்!

கல்குடா தொகுதியிலுள்ள புனையில் சட்டவிரோத சிங்களக் குடியேற்றம் தீவிரமாக நடைபெற்று வருகிறதாக தெரிகிறது. சிங்களக் கள்ளக் குடியேற்றக்காரர்கள், காடுகளை வெட்டி குடியேறி வருகிறார்களாம். இதுபற்றி புதிய நீதியமைச்சர் நடவடிக்கையெடுக்க வேண்டுமென கல்குடாத் தொகுதி மக்கள் கோருகின்றனர்.

## இன்றைய கருத்தரங்கு

தமிழர்விடுதலைக்கூட்டணியின் கொழும்புக்கிளை சார்பில் நடைபெறும் வாராந்தக் கருத்தரங்கு இன்று புதன்கிழமை மாலை 6-30 மணிக்கு 51, லோரிஸ் வீதி, பம்பலப்பிட்டியில் நடைபெறும். இக்கருத்தரங்கில் வட்டுக்கோட்டை பா. உ. திருநாவுக்கரசு 'தமிழ் ஈழத்தில் தொழில் வளம் காணீர்' எனும் தலைப்பிலும், திரு. க. நடராசா (கம அபிவிருத்தி அலுவல்) 'பனை அபிவிருத்தியில் தன்னிறைவு' எனும் பொருள் பற்றியும் திரு. ஈழவேந்தன் தலைமையில் உரை நிகழ்த்துவார்கள்

# எதிர்க்கட்சி தலைவருடன் அவுஸ்ரேலிய டெலிவிசன் நிருபர் சந்திப்பு!

## தமிழ்ஈழப் பிரச்சினை குறித்து விரிவான விளக்கம்!

**தேசிய அரசப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களை அவுஸ்ரேலிய டெலிவிஷன் நிருபர் ஒருவர் சந்தித்து தமிழ்ஈழப் பிரச்சினை குறித்து விளக்கமாகக் கேட்டறிந்தார். அத்துடன் வெள்ளவத்தை ராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெற்ற தமிழீழ எழுச்சி விழாவில் திரு. அமிர்தலிங்கம் உரையாற்றுவதையும் கூடியிருந்த மக்கள் வெள்ளத்தையும் குறித்த நிருபர் டெலிவிஷன் படமாக எடுத்துக் கொண்டார்.**


இலங்கையின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களையும் இலங்கை மக்களின் வாழ்க்கை முறைகளையும் டெலிவிஷனில் படம் பிடித்துச் செல்வதற்காகவும், இங்குள்ள அரசியல் தலைவர்களை செவ்வி காண்பதற்காகவும் அவுஸ்ரேலியாவிலிருந்து திரு. ஹட்சன் எனும் டெலிவிஷன்நிருபர் கொழும்பு வந்துள்ளார். இவர் கொழும்பில் பல்வேறு அரசியற் கட்சிகளின் தலைவர்களை செவ்வி கண்டதுடன், அச்செவ்விகளை டெலிவிசன் படமாகவும் எடுத்துள்ளார்.

ஹோட்டல் 'இண்டர் கொன்ரினன்ரல்' எனுமிடத்தில் தங்கியிருந்த இந்த டெலிவிஷன் நிருபரை, தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக்கிளைத் தலைவர் திரு. ஈழவேந்தன், சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன் தமிழ் மகளிர் பேரவையைச் சேர்ந்த செல்வி. ஊர்மிளா, த. இ. பேரவையைச்சேர்ந்த திரு. ஆ. ரகுபதி பாலசிறீதரன் ஆகியோர் சந்தித்து, ஈழத்தமிழர் பிரச்சினை பற்றி புள்ளி விபரத்துடன் விளக்கியதுடன், கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தையும் கையளித்தனர். ஐரிஷ் காரரான திரு. ஹட்சன் ஈழத்தமிழர் பிரச்சினையை சுலபமாகப் புரிந்து கொண்டார். அவர் எழுப்பிய ஐயவினுக்களுக்கெல்லாம், ஈழவேந்தனும் ஏனையோரும் தகுந்த விளக்கமளித்ததுடன், கூட்டணி செயலதிபரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு, அமிர்தலிங்கம் அவர்களை திரு. ஹட்சன் சந்திக்கவேண்டுமென்றும் வற்புறுத்தினர்.

இவர்களது ஏற்பாட்டின் படி திரு. ஹட்சன் அவர்கள் தலைவர் அமிர்தலிங்கம் அவர்களை 5-8-77ல் திரு. வடிவேற்கரசன் இல்லத்தில் சந்தித்து உரையாடினார். அப்போது திரு. அமிர்தலிங்கம் அவர்கள் தமிழ் ஈழப் பிரச்சினை குறித்து திரு. ஹட்சனுக்கு சாங்கோபாங்கமான விளக்கமளித்தார். இச்சந்திப்பின்போது திருமதி அமிர்தலிங்கம், திரு. ஈழவேந்தன், திரு. கோவை மகேசன், செல்வி ஊர்மிளா, திரு. ஆறுமுகம், திரு. வடிவேற்கரசன் ஆகியோரும் உடனிருந்தனர்.

திரு. ஹட்சன், அமிர்தலிங்கத்திடம் செவ்வி பெற்றதுடன், அவர் செவ்வியளிக்கும்போது அந்தக் காட்சியை டெலிவிஷன் படமாகவும் எடுத்தார். பின்னர் வெள்ளவத்தை ராமகிருஷ்ண மண்டபத்தில் அன்று மாலை நடைபெற்ற தமிழீழ எழுச்சி விழாவில் சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் அவர்களது 'அரசியல் மடல்' நூலை அறிமுகம் செய்து வைத்து திரு. அமிர்தலிங்கம் உரையாற்றிய காட்சியையும் திரு. ஹட்சன் டெலிவிஷனில் படம் பிடித்தார்.

திரு. ஹட்சனுக்கு திரு. ஆ. ரகுபதிபாலசிறீதரன் பின்னர் விருந்து ஒன்று அளித்து கௌரவித்தார் இவ்விருந்தில் திரு. அமிர்தலிங்கமும் கலந்துகொண்டார்.



தமிழீழ எழுச்சிவிழாவில் சுதந்திரன் ஆசிரியர்கோவை மகேசன் எழுதிய அரசியல் மடல்களின் முதலாவது தொகுப்பை திரு. அமிர்தலிங்கத்திடமிருந்து திரு. எஸ். தொண்டமான் பெற்றுக்கொள்ளும் காட்சி.

## காட்டாறு விமர்சனக் கூட்டம்

உள்நாட்டு இறைவரித் திணைக்கள தமிழ் இலக்கிய மன்றத்தினால் எதிர்வரும் 11-8-77 வியாழக்கிழமை பி. ப. நாலு மணிக்கு புதிய செயலகத்தின் ஆறுவது மாடியில் 'காட்டாறு' நூல் விமர்சனக் கூட்டம் நடைபெறும்.

## இரத்தக்களரி..

—2-ம் பக்கத்தொடர்

நிறுவும் பணியில் எம்மை முழுமையாக அர்ப்பணிப்போம் என்றார்.

புத்தளம் வேட்பாளர் டாக்டர் இலியாஸ் பேசுகையில்—"இத்தேர்தலில் வடமாகாண மக்கள் பணத்திலும், பொய்ப்பிரசாரத்திலும் மயங்காது கொள்கைக்காக வாக்களித்துள்ளனர். அவர்களைப் பாராட்டுகிறேன்; தந்தை செல்வாவின் அணியில் நான்தொடர்ந்தும் பணியாற்றிவருவேன்' என்றார்.

கல்முனை வேட்பாளர் ஜனாப் சம்சுதின் பேசுகையில்—"நாம் தோல்வி கண்டு துவண்டுவிடமாட்டோம்—தொடர்ந்தும், தமிழ் ஈழ இலட்சியத்தை முஸ்லிம் மக்கள் மத்தியில்எடுத்துரைத்து அவர்களை எமது கொள்கைபால் திருப்புவோம்" என்றார்

த. இ. பேரவை சார்பில் ஆ. ரகுபதிபாலசிறீதரன் பேசுகையில் — எங்கள் தலைவர்கள் காலத்தைக் கடத்தாது தமிழ் ஈழப்போராட்டத்தை விரைவில் ஆரம்பிக்கவேண்டுமென்று கூறி தமிழ் இளைஞர்களின் உள்ளத்துடிப்பை அங்குகொட்டினார்.

காவலூர் பா. உ. பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசுகையில் தனிநாடு கோரிக்கைக்கு குறைந்த எதையும் ஏற்கின்ற நிலையில் தமிழினம் இன்று இல்லை யென்றார்.

உடுப்பிட்டி தே. பே. உறுப்பினர் திரு. த. இராசலிங்கம் தனது உரையில் "1948ம் ஆண்டு இந்த நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தவுடன் தமிழர்களின் அடிமை வாழ்வு ஆரம்பித்துவிட்டது. தமிழர்கள் பிரதேச ரீதியாக, கட்சிரீதியாக பிரிக்கப்பட்டிருந்த மக்கள் இன்று ஒற்றுமையாகிவிட்டோம் உடுப்பிட்டித் தொகுதியில் மக்கள் தந்த தீர்ப்பின் அடிப்படையில் பார்க்கும் போது எமது இனத்திற்கு விடுதலை வெகுதூரத்தில் இல்லை. இதுவரையும் மாறி மாறி ஆட்சிக்கு வந்த எந்தக் கட்சிகளும் தமிழருடைய பிரச்சினைகளை சட்டரீதியாக தீர்த்துவைக்க முன்வரவில்லை. விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடும் நாம் இரண்டு விடயங்களைத் தீர்மானிக்க வேண்டும் ஒன்று ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு எமது உடல் பொருள் ஆவி அனைத்தையும் ஒப்படைக்க நாம் ஆயத்தமாக வேண்டும். அடுத்தது அரசியல் ஆதிக்கத்தை நாம் கைப்பற்றி அதன்மூலம் சாதிப்பாகுபாட்டை நம்மிடையே இல்லாது செய்யவேண்டும். இன்றைய சிங்கள ஆளும் கட்சிகளின் கீழ் எமக்கு விமோசனம் கிடையாது என்றார்.

மன்னார் உறுப்பினர் திரு. பி. எஸ். சூசைதாசன் தனது உரையின்போது "இராசசிங்கன் ஆண்டான் என்பதற்காக கண்டியையோ, ஏலேல சிங்கன் எனும் எல்லாளன் ஆண்டான் என்பதற்காக அநுராதபுரத்தையோ நாம் இன்று கேட்கவில்லை. நாம் ஆண்டு இழந்த எமது நாட்டையே கேட்கின்றோம். இன்று திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தால் எமது நாடு பறிபோய்க்கொண்டிருக்கின்றது இந்த நிலை நீடிக்குமாயின் நாம் கடலிலேதான்தான் போய் விழவேண்டிய நிலை ஏற்படும். நாம் கடலில் தானும்போய் விழமுடியாத நிலையில் அங்கும் சிங்களக் கடற்படையினர் உள்ளனர் இந்நிலையில் அடுத்த தேர்தலில் நிற்பதற்கு இங்கு தமிழர்கள் இருப்பார்களோ என்ற நிலைமையே உருவாகி வருகிறது" —என்றார்.

இக்கூட்டத்தில் விற்கப்பட்டப் பிரவேசச் சீட்டுகளின் நிதி ரூபாய் ஐயாயிரம் இளைஞர் பேரவையைச் சேர்ந்த திரு. மண்டூர் மகேந்திரனால் தந்தை செல்வா நினைவாலயக் கட்டிட நிதிக்காக செல்வா நினைவாலய அறங்காவற் குழு உறுப்பினரான திரு. சச்சிதானந்தம் அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

இவ்விழாவின் ஆரம்பத்தில் சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன் எழுதிய அரசியல் மடல்களின் முதலாவது தொகுப்பு நூலை கூட்டணி செயலதிபரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் அறிமுகம் செய்துவைக்க, கூட்டணித் தலைவர் திரு. எஸ். தொண்டமான் முதலாவது பிரதியை வாங்கி விற்பனையை ஆரம்பித்து வைத்தார்.

இறுதியில் செல்வி திலகவதி கணபதிப்பிள்ளையின் தமிழ்ஈழத் தேசிய கீதத்துடன் கூட்டம் நிறைவு பெற்றது.


**நீம் வாசனை சோப்**

சுத்தமான வேப்பெண்ணெய் கலந்து தயாரிக்கப்பட்ட நீம் வாசனை சோப்பை வாங்கி உபயோகியுங்கள். உங்கள் சருும பாதுகாப்புக்கு சிறந்தது.

**ஒரு மில்க்வைற் தயாரிப்பு**


இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1977ம் வருடம் ஆகஸ்ட்மாதம் 10-ந் திகதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org